[10th August 1960

SRI A. VEDARATHNAM: முன்பு இந்தப் பிரச்னை வந்த காலத்தில் கேரள ராஜ்யத்தைத் தவிர மற்ற ராஜ்யங்கள் இதற்கு ஒத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது இருக்கிற கேரள அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா? அப்படி யானால் அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கேரள சர்க்கார் பல பிரச்னைகளை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளில் அனுகூலமான முடிவு எடுப்பார்கள் என்றும் எதிர்ப்பார்க் கிறேன்.

SRI A. VEDARATHNAM: அப்படி ஒரு பொது போலீஸ் படை ஏற்படுத்துவது என்று முன் வந்தால் அது எந்த இடத்தில் அமைக்கப்படும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒவ்வொரு பகுதி அமைக்கப்படும்.

"Your Friend"

*88 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

"உங்கள் நண்பன்" என்ற போலீஸ் படக்காட்சி எந்தெந்த ஜில்லாக்களிலே, எத்தனை தடவைகள் காட்டப் பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM: The film was exhibited in all the districts in the State including Madras City. It is not possible to state the number of times the film was exhibited, as no record is maintained for the purpose.

SRI P. G. MANICKAM: இந்தப் படக்காட்சிகள் எல்லாம் போலீஸ் இலாகா மூலம் காட்டப்படுகிறதா அல்லது யாரால் காட்டப்படுகிறது? சினிமா தியேட்டர்கள் ஒவ்வொன்றும் இந்தப் படக்காட்சியைக் காட்டுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பல இடங்களில் இந்தப் படக்காட்சி காட்டப்படுகிறது. போலீஸ் இலாகா மூலம் மட்டும் அல்ல.

Buffalo Farm

* 89. *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have instructed the District Veterinary Officer, Erode, to examine the feasibility of opening a buffalo farm in Chennimalai forests;